Press Release No.: 802

Date : 26/9/08

# பத்திரிகை குறிப்பு

## மாநில அளவிலான கைத்தறி மற்றும் துணித்தொழில் ஆலோசனைக் குழு மூன்றாவது கூட்டம்

தமிழ் நாட்டின் கிராமப்புற பகுதிகளில் பெருமளவு வேலை வாய்ப்பு வழங்குவதில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிக முக்கியமான தொழிலாக துணித்தொழில் விளங்குகிறது. கைத்தறி தொழிலின் வளர்ச்சிக்காகவும் அதனை சார்ந்த நெசவாளர்களின் நலனுக்காகவும் பாடுபடுவதே கைத்தறி துறையின் முதன்மை நோக்கமாகும்.

இந்தியாவில் மொத்தமுள்ள 34.86 இலட்சம் கைத்தறிகளில் தமிழ்நாட்டில் 4.13 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இதன் மூலம் கிட்டத்தட்ட 6.08 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள 4.13 இலட்சம் கைத்தறிகளில் 2.17 இலட்சம் கைத்தறிகள் 1104 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் எஞ்சியுள்ள 1.96 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவு அல்லாத அமைப்புகளிலும் இயங்கி வருகின்றன.

கைத்தறி நெசவாளர்கள் மற்றும் துணித்தொழிலின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு கைத்தறி, விசைத்தறி, மற்றும் துணித்தொழில் நெசவாளர்களின் குறைகளை முழுமையாக பகுத்தாய்வு செய்து அவற்றிற்கான தகுந்த தீர்வுகளை அரசுக்குப் பரிந்துரை செய்யவும், மத்திய மாநில அரசுகளால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களையும் ஆய்வு செய்யும் வகையிலும், கைத்தறி, விசைத்தறி மற்றும் துணித் தொழில் வளர்ச்சிக்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்கும் நோக்குடனும், கைத்தறி தொழிலின் தனித் தன்மையை பாதுகாக்கும் வகையிலும், **"மாநில அளவிலான கைத்தறி மற்றும் துணித் தொழில் ஆலோசனைக் குழு"**வினை அமைத்துள்ளது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை அமைச்சர் அவர்களை பெருந்தலைவராகக் கொண்ட இக்குழுவில் 10 அலுவல் சார் உறுப்பினர்களும், 2 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 5 சட்ட மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 8 அலுவல் சாரா உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர்.

கைத்தறி நெசவாளர்களின் நலன் மேம்படவும் கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை வளர்ச்சிக்காகவும் பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை மத்திய மற்றும் மாநில உதவியுடன், கைத்தறி மற்றும் துணிநூல்துறை செயல்படுத்தி வருகிறது.

அவற்றில், நெசவாளர் முதியோர் ஓய்வூதியத்திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் மற்றும் கைத்தறி குழும வளர்ச்சித் திட்டம், செறிவுப் பகுதி முன்னேற்றத் திட்டம் ஆகியவை மிக முக்கிய திட்டங்களாகும்.

கடந்த இரண்டு மாநில அளவிலான கைத்தறி மற்றும் துணித் தொழில் ஆலோசனைக்குழு உறுப்பினர்களின் கூட்டத்தில், உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில், இந்த அரசு, கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 100 யூனிட்டும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட்டும் இலவசமாக மின்சாரம் வழங்கி வருகிறது.

நெசவாளர் நல்வாழ்வுத் திட்டத்தில், முதியோர் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு, ரூ. 200/-லிருந்து 01.06.2007 முதல் ரூ. 400/- ஆகவும்,

நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் 01.05.2007, முதல் ரூ. 350/- லிருந்து ரூ. 550/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

அதைப்போல, ஆயுள் காப்பீடு திட்டத்தின் கீழ், 01.10.2007 முதல் இயற்கை மரணத்திற்கு ரூ. 60,000/-மாகவும், விபத்தில் ஏற்படும் மரணத்திற்கு ரூ. 1,50,000/-மாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பெரும்பான்மையான உறுப்பினர்களின் கோரிக்கைக்கேற்ப, 01.04.2008 முதல், 4% வட்டி மான்யம் வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்களுக்கு, 01.06.2008 முதல் அடிப்படைக் கூலியில் 10% உயர்த்தி இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை ஏற்று, அவர்களுக்கு புதிய ஊதிய விகிதங்களை நடைமுறைப்படுத்த, ஒரு குழு இந்த அரசால் அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரை பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் ஒப்புதல் பெறப்பட்டதும், புதிய ஊதிய விகிதங்கள் அமுல்படுத்தப்படும்.

இயங்கிவரும் 5 கூட்டுறவு நூற்பாலைகளின் தொழிலாளர்களுக்கு 01.01.2008 முதல், மாதம் ஒன்றுக்கு ரூ. 560/- ஊதிய உயர்வு வழங்க, இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

இதுமட்டுமல்லாது , கைத்தறி நெசவாளர்களின் தேவைகளை அறிந்து, அவ்வப்போது அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனோடு, துணித்தொழிலின் வளர்ச்சிக்கும் துறை எடுத்து வரும் நடவடிக்கை, கைத்தறி மற்றும் துணித்தொழிலின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.

2/3

இதே போல கைத்தறித் தொழில், விசைத்தறித் தொழில், துணித் தொழில் ஆகிய மூன்று பிரிவுகளையும் சார்ந்த அனைத்து தரப்பினரும் எதிர்கொள்ளும் மாவட்ட அளவிலான பிரச்சனைகளை ஆராய்ந்து உடனுக்குடன் சரிசெய்யும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும், சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநரை கூட்டுநராகவும் கொண்ட மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழு ஒன்றை ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழக அரசு அமைத்துள்ளது.

மேற்கண்ட மாநில மற்றும் மாவட்ட கைத்தறி மற்றும் துணித்தொழில் ஆலோசனைக் குழுக்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது தேவைக்கேற்பவோ கூடி ஜவுளித்தொழில் வளர்ச்சிக்காக தகுந்த வழிமுறைகளை ஆராய்ந்து முடிவெடுக்கும். இதன் மூலம் தமிழ்நாட்டில் கைத்தறி மற்றும் துணித்தொழில்கள் பாதுகாக்கப்படுவதோடு, வளச்சிப்பாதையில் செல்வதும் உறுதி செய்யப்படும்.

மாநில அளவிலான கைத்தறி மற்றும் ஆலோசனைக் குழுவின் முதற் கூட்டம் 26.04.2007 அன்று நடைபெற்றது. இக்குழுவின் இரண்டாவது கூட்டம் 26.11.2007 அன்று காலை 11.00 மணியளவில் திண்டுக்கல் நாகல் நகர், எண்.85 மெங்கல்ஸ் சாலையில் உள்ள பார்சன்ஸ் கோர்ட் ஹோட்டல் சிறுமலை அரங்கில் நடைபெற்றது. இக்குழுவின் மூன்றாவது கூட்டம் 26.09.2008 அன்று சென்னை கோஆப்டெக்ஸ் கூட்ட அரங்கில் மாலை 4.00 மணி அளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கைத்தறி, விசைத்தறி, மற்றும் துணித்தொழிலின் வளர்ச்சிக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் வளர்ச்சி மற்றும் நல்வாழ்வு திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. ஆலோசனைக் குழு உறுப்பினர்களும் தங்களது ஆலோசனைகளை வழங்கினர். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் தலைமை உரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் குழு உறுப்பினர்களுடன் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை செயலர் திரு விஸ்வநாத் ஷெகாவ்கர், இ.ஆ.ப., அவர்கள் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திருமதி ஆர். ஜெயா, இ.ஆ.ப., அவர்கள், கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திருமதி எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப., அவர்கள், திரு.க. கர்ணன், கூடுதல் இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் அவர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

3/3

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9